## அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி – 2017

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆம் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2014 இன் 01 ஆம் இலக்க பல்கலைக்கழகக் கல்லூரி கட்டளைச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இது தொடர்பான விபரமான அறிக்கையொன்று பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளருக்கு 2018 மே 24 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகக் கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 496,678 தொகையான மீண்டெழும் தன்மையான செலவினம் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டு பெறுமானத்தேய்விடப்பட்டதனால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 471,844 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் தேறிய பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம், நிலையான சொத்துக்கள் பாவனைக்காக கிடைக்ககூடியதாகவுள்ள போது அவற்றிற்கான பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 193,350 பெறுமதியான 03 சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருக்காததால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,707 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் தேறிய பெறுமதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 07/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் விரலடையாளப் பதிவு இயந்திரத்தினூடாக சேவை நிலையத்தில் பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் கல்லூரியின் கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவுசெய்வதற்கு விரலடையாளப் பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் முறையான மேற்பார்வையின்றி பதிவேட்டில் வருகை மற்றும் வெளிச்செல்லல்கள் முறையற்றுக் குறிப்பிடப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதி விளைவு ரூபா 7,936,933 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 453,080 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 8,390,013 ஆன வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது. பதவியணியினர் மீதான செலவினம் ரூபா 5,378,647 ஆலும் மாணவர்களின் கல்விசார் செலவினம் ரூபா 2,589,329 ஆலும் அதிகரித்திருந்தமையானது மேற்குறிப்பிடப்பட்ட பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 148,756 பற்றாக்குறை மற்றும் ரூபா 453,080 மிகையை அவதானிக்க முடிந்திருந்ததுடன் அவ்வாறே மீளாய்வாண்டில் ரூபா 7,936,933 பற்றாக்குறையை அவதானிக்க முடிந்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியங்கள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கம் செய்த பின்னர், 2015 ஆம் ஆண்டின் ரூபா 27,643,516 தொகையான கல்லூரியின் பங்களிப்பானது மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 40,107,642 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2016 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்காக கல்லூரியால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) கல்லூரியானது ஆரம்ப மாணவர் பதிவுசெய்யப்படுவதை 2016 ஆம் ஆண்டில் 270 மாணவர்களிலிருந்து 2017 ஆம் ஆண்டில் 300 மாணவர்கள் வரை அதிகரிப்பதற்கு திட்டங்களை வரைந்திருந்த போதிலும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே 258 மற்றும் 191 மாத்திரமேயாகும். அதன் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது மாணவர்களைப் பதிவுசெய்தல் 26 சதவீதம் குறைவடைந்திருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மாணவர்கள் கலந்துகொள்வதை அதிகரிப்பதற்கு முறையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 - 2018 கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், கல்லூரியானது 2015 ஆம் ஆண்டில் 8 கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கும் வருடாந்தம் கற்கைநெறியொன்றை சேர்ப்பதன் மூலம் மீளாய்வாண்டில் உள்ளவாறு கற்கைநெறிகளின் எண்ணிக்கையை 10 வரை அதிகரிப்பதற்கும் திட்டங்களை வரைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 8 கற்கைநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(இ) கல்லூரியின் கல்விசார் சுற்றாடலை முன்னேற்றுவதற்காக தொழில்துறை வழிகாட்டல் பிரிவு (Career Guidance Unit) மாணவர் ஆலோசனை பிரிவு (Student Counselling Unit) என்பன ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பிரிவுகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------

-

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கட்டுப்பாட்டு சபையால் தயாரிக்கப்பட்ட நெறிமுறைகளின் பிரகாரம், தேசிய தொழில்சார் தகைமைகளின் (NVQ) 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களிலுள்ள கற்கைநெறிகளை நடாத்துதல் மற்றும் தேசிய தொழில்சார் தகைமைகளிற்குச் சமமான மட்டங்களில் வேறு தொழில்நுட்ப கற்கைநெறிகளை நடாத்துதல் என்பன பல்கலைக்கழகக் கல்லூரியின் நோக்கங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கல்லூரியால் நடாத்தப்பட்ட 08 கற்கைநெறிகளில் 06 இற்கான தேசிய தொழில்சார் தகைமைகளின் (NVQ) 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களின் தொழில் தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழானது (Accreditation) கற்கைநெறிகள் ஆரம்பித்ததிலிருந்து 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்படி கட்டளைச்சட்டத்தின் பிரகாரம், 5 மற்றும் 6 ஆம் மட்ட தேசிய தொழில்சார் தகைமைகளிற்கான தகைமைகளானது பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 60 சதவீதமானது 4 ஆம் மட்ட தேசிய தொழில்சார் தகைமைகளில் தகைமை பெற்றிருந்த விண்ணப்பதாரர்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 40 சதவீதமானது பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தர) தகைமைகளுடாக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. கல்லூரியானது 2016 ஆம் ஆண்டிற்காக 258 மாணவர்களையும் 2017 ஆம் ஆண்டிற்காக 191 மாணவர்களையும் பதிவுசெய்திருந்த போதிலும் அம்மாணவர்கள் பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தர) தகைமைகளிற்கு மேல் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) 2017 ஆம் ஆண்டில் 8 கற்கைநெறிகளிற்காக பதிவுசெய்யப்பட்ட 191 மாணவர்களில் 7 கற்கைநெறிகளின் இருபத்து இரண்டு மாணவர்கள் கற்கைநெறிகளை விட்டுச்சென்றிருந்ததுடன் கற்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 169 வரை குறைவடைந்திருந்தது. கல்லூரியின் ஒவ்வொரு கற்கைநெறிகளிற்காக மாணவர்களை பதிவுசெய்தல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 12 சதவீதம் தொடக்கம் 47 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

---------------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியினரிலுள்ள விரிவுரையாளர்களில் 08 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

---------------------------------------------------------

பல்கலைக்கழக கல்லூரிக்காக பயன்படுத்தப்படுகின்ற கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள காணி என்பவற்றின் உரித்துரிமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் பின்பற்றவேண்டியதுடன் அதற்காக 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டம் நிறைவேற்றப்பட்டு சுற்றறிக்கை மூலம் அனைத்து அரசாங்க நிறுவனங்களிற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தமது விடயப்பரப்பிற்கு கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக சகல அரச நிறுவனங்களும் அறிந்திருக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழகக் கல்லூரி அது தொடர்பில் அறிந்திருக்காததன் காரணமாக அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் மற்றும் அவ் இலக்குகளை அடைவதை அளவிடுவதற்கு தேவையான சுட்டிகளையும் இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

#### 6.1.1 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பூங்காவை அலங்கரிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக மூன்று கேள்விதாரர்கள் விலைமனுக்களை சமர்ப்பித்திருந்ததுடன் ரூபா 3,105,237 ஆன ஆகக்குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த கேள்விதாரரிற்கு 2017 யூன் 14 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கேள்விதாரர் 2017 யூன் 19 இல் கடிதம் மூலம் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதனை நிராகரித்திருந்தார். இருந்த போதிலும், கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 35,000 கேள்வி பிணையினை வங்கிக்கு சமர்ப்பிப்பதன் மூலம் காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முறையாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொருளிருப்புக் கட்டுப்பாடு | வருடாந்தம் பொருளிருப்பு புத்தகம் சமப்படுத்தப்படாமை. |
| (இ) பெறுகை செயன்முறை | வேலைகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பாக அரசாங்க பெறுகை வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கத் தவறுதல். |